<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 526/2021**</u>

<u>**வழக்கு சாட்சி PW-10**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணாச்சலம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாடசாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். 4 வருடங்களுக்கு முன்பு நான் அந்த கையெழுத்தை சூச்சமுடையார்கோவில் பக்கம் வைத்து போட்டு கொடுத்தேன். நான் அந்த சமயத்தில் கோவில் பொறுப்பில் இருந்தேன். போலீசார் வந்ததற்காக கையெழுத்து கேட்டார்கள், போட்டு கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 29.03.2021ம் தேதி, மதியம் 01.30 மணிக்கு போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில்

நானும், பாபு என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 17:56:53 +0530